செய்திப் பணிப்பாளர்/ செய்தி ஆசிரியர் 2019 யூலை 24

செய்தி வெளியீடு

உணவு ஐந்தொகைப் படிவம் - **2013-2017**

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் பொது வழங்கல் அமைச்சு

தொலை பேசி :- **011-2147464** தொலை நகல் : **011-2147463**

---

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் ஒவ்வொரு வருடமும் உணவு ஐந்தொகைப் படிவத்தினை தயாரிப்பதுடன் இம்முறை ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பினால் அறிமுகஞ்செய்யப்பட்ட மேம்படுத்தப்பட்ட முறையியல்களை பயன்படுத்தி 2013 முதல் 2017 ஆண்டு வரைக்கான உணவு ஐந்தொகைப் படிவத்தைத் தயாரித்துள்ளது.

உணவு ஐந்தொகைத்தாள் என்பதனால் கருதப்படுவது யாதெனில் ஒரு நாட்டில் குறிப்பிட்ட வருடமொன்றில் காணப்படும் மொத்த உணவு வழங்கல் எவ்வளவு என்பதனை கணிப்பிட்டு காட்டும் ஆவணமாகும். இங்கு ஒரு நாட்டின் மொத்த உணவு வழங்கல் தயாரிக்கப்படுவது, நாட்டினுள் உற்பத்தி செய்யப்படும் உணவின் அளவிற்கு இறக்குமதி செய்யப்படும் உணவு அளவினைச் சேர்த்து அதற்கு வருட ஆரம்பத்தில் இருந்த இருப்புக்களை செம்மையாக்கிய பின் கிடைக்கும் பெறுமானத்திலிருந்து கால்நடை உணவுகள், விதைகள், உணவு அல்லாத ஏனைய உற்பத்திகள் மற்றும் கழிவுகள் ஆகியவற்றின் அளவினைக் கழிப்பதன் மூலம் பெற்றுக்கொள்ளப்படும் பெறுமானமாகும்.

( உற்பத்தி + இறக்குமதி - இருப்பு மாற்றம் = ஏற்றுமதி + கால்நடை உணவு + விதைகள் + உணவு அல்லாத ஏனைய உற்பத்திகள் + கழிவுகள்)

இந்த உணவு ஐந்தொகைப் படிவத்தின்படி 2013 முதல் 2017 வரையிலான வருடங்களின் சராசரி பெறுமானங்களை (Average) கருத்திலெடுக்கையில் இலங்கையில் ஒரு தனிநபர் நாளொன்றுக்கு 2883 கிலோ கலோரிகளும் புரதம் 72 கிராம் மற்றும் கொழுப்பு 52 கிராம் என்றவாறு பெற்றுக்கொள்ள முடியும். மேலும், கலோரி வழங்களில் 93% தாவர உணவுகளாகும் என்பதுடன் எஞ்சியவை விலங்கு சார்ந்த உணவுகளிலிருந்து பெறப்படுகின்றன. புரதம் வழங்களில் 48% தானிய உணவு வகைகளிலிருந்து 12% மீன் மற்றும் கடல் சார்ந்த உணவுகளிலிருந்து 11% பருப்பு வகைகளிலிருந்தும், மரக்கறி, பால் சார்ந்த உற்பத்திகள் மற்றும் இறைச்சி சார்ந்த உற்பத்திகள் முறையே 7%, 6% மற்றும் 5% என்றவாறும், கொழுப்பு வழங்களில் 32% மரக்கறி எண்ணெயிலிருந்தும் 31% கொழுப்புடைய பயிர்களிலிருந்தும் (oil crop) பெறப்படுகிறதென கணிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறே ஒரு நபருக்கு ஒரு வருடத்திற்குத் தேவையான சராசரி அரிசி வழங்கல் 169 கிலோ கிராம் என்பதுடன் காய்கறி 132 கிலோகிராம், பழங்கள் 42 கிலோ கிராம் மற்றும் பால், மீன், இறைச்சி, முட்டை என்பன் முறையே 34,32,10 மற்றும் 5 கிலோகிராம் என இதன் மூலம் தெரியவந்துள்ளது.

உணவு ஐந்தொகைப் படிவம் பற்றிய சகல தகவல்களும் அடங்கிய அறிக்கை தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையப் பக்கம் www.statistics.gov.lk என்பதனை அணுகுவதன் மூலம் பெற்றுக் கொள்ள முடியும்.

ஐ.ஆர்.பண்டார
பணிப்பாளர் நாயகம்
தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்.
தொலைபேசி இலக்கம் : 011-2147020